நன்நீரும் மண்வளமும்

## சிறுதானியப் பயிர் உற்பத்தியாளர் சங்கம் விடுக்கும் வேண்டுகோள்

*நில மண்ணை செழிப்பாக்குதல் -- திட்டம் - 1*

## இந்த மாரி மழையுடன் எமது மண்வளத்தை செழிப்பாக்குவோமா?

மேட்டு நிலங்கள் அவை தோட்டம் செய்யும் மண்கள். அந்த மண்வளத்தை செழிப்பாக்கவும் மாரிமழையுடன் வளரக்கூடிய அரிதாக விளைவிக்கப்படும் பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் இந்த 2017 / 2018 மாரி மழைப்போகத்தில் ஒரு அவசர வேலைத்திட்டத்தை செயற்படுத்த முன்வருவீர்களா?

**மேட்டுக்காணிகளில் 2017/2018ம் ஆண்டு காலபோக மானாவாரி பயிர்ச்செய்கை செய்யவேண்டிய வேலைத்திட்டங்கள்.**

1. வட மாகாணத்திலுள்ள சகல தோட்டக்காணிகளும் மழைக்கு முன் துப்பரவாக்கப்பட்டு வேலிகள் சரி பார்க்கப்பட்டு மானாவாரியாக பயிர் செய்கைக்கு தயார்படுத்தப்படுத்துதல் இது 2017.09.15ந் திகதிக்கு முன்னர் செய்து முடிக்கப்படுதல்
2. வேலிகளில் கதிகால் நடவேண்டியிருப்பின் பூவரசு கிளிசூரியா போன்ற மரங்களை மட்டும் நாட்டவேண்டும். இவை பின்னர் பசுந்தாட் பசளைக்கும் மாட்டுத் தீவனத்திற்கும் உகந்த இலைதழைகளாக பயன்படுத்தலாம்.
3. இப்போது பெய்துள்ள உழவு மழையை பயன்படுத்தி நிலத்தைக் கொத்தியோ உழுதோ மண்ணைப் பண்படுத்தி வைத்தல்.
4. பின் புரட்டாதி கடைசியில் அல்லது ஐப்பசியில் பருவ மழை ஆரப்பமாகும் போது அம்மேட்டுக் காணியில் உழுந்து பயறு நிலக்கடலை அல்லது சணல் பயிரை விதைத்தல். இப்பயிர்கள் (Legumes) நிலத்தில் நைதரசனை நிலைபெறச் செய்து மண்ணை செழுமையாக்கும்.
**(தேவையான விதைகளுக்கு இப்பொழுதே அதற்கேற்ற விதை உற்பத்திப் பகுதியினரோடு தொடர்பு கொண்டு நேரத்திற்குக் கிடைக்க உறுதிசெய்யப்பட வேண்டும்.)**
5. ஓரளவு பள்ளம் சார்ந்த காணிகளாயின் வரகு சோளன் குரக்கன் போன்ற பயிர்களை செய்ய மக்கள் முன்வரவேண்டும். பனங்காணிகளில் வரகு விதைத்தலை மீண்டும் ஆரம்பிக்க முயற்சியுங்கள்.
6. அக்கராயன்குளம் வவுனிக்குளம் போன்ற குடியேற்றப் பகுதிகளில் காட்டோரம் மிருக அழிவுக்கு அச்சமான இடங்களாயின் அங்கு ஆமணக்கம் விதைகளை பயிரிட முடியும். இப்பயிர் எந்த பராமரிப்புமின்றி தானாக விளைச்சளை தரும். இதன் விளைச்சளை பெயின்ற் கம்பனிக்கு விற்கலாம்.
7. வேலிகளில் படரக்கூடியதாக பயித்தை பாகல் அவரை பிசுக்கு போன்ற வேறும் கொடிப்பயிர் வகைகளை நாட்டி வருமானம் பெறலாம்.

இப்பயிர்களுக்கிடையில் களைகள் வளரமாட்டாது. மழை சீராக பெய்தால் பூச்சி புழுத் தொல்லையும் ஏற்படாது. தெளிப்பான்களும் அதிகம் தேவைப்படாது.
தெளிப்பான்களாக வேப்பம் கொட்டைவிதை மற்றும் இலைகளிலிருந்து தயாரிக்கப்படும் அவித்த நீரையோ சாணி- மாட்டுசலக்கலவையையோ பயப்படுத்தவும்

**தேவையான வேலிக்கேற்ற கதிகால்கள் மற்றும் உழுந்து பயறு நிலக்கடலை சணல் எள்ளு ஆமணக்கு வரகு குரக்கன் சோளன் ஆகியவற்றின் விதைகளை தேவையான விவசாயிகளுக்கு வினியோகிக்கக்கூடிய விதை உற்பத்தியாளர்களிடமும் விவசாய திணைக்களத்திடமும் முன் கூட்டியே விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளுங்கள்.**

வரகு விதைக்க முன்வருபவர்கள் தேவையான விதைக்கு சிறுதானியப் பயிர் உற்பத்தியாளர் சங்கத்திடம் பெற்றுக் கொள்ளலாம். அளவெட்டியிலும் வவுனியாவிலும் விதை வரகு பெறலாம்.

வட மாகாணத்திலுள்ள சகல மேட்டுக்காணிகளும் மானாவாரிப் பயிர்ச் செய்கைக்குள் கொண்டுவரப்பட்டால் எமது மண்வளத்தை செழிப்பாக்குவது மட்டுமின்றி எதுவித மேலதிக முயற்சியுமின்றி ஒரு பணப்பயிர் செய்கையில் இலாபமடையவும் முடியும்.

## <u>இயற்கை வழி விவசாயத்துடன் இணைவோம்.</u>


| | | |
|---|---|---|
| கந்தையா சிவகுமார் | கனக நமநாதன் | துரை. கனகரத்தினம் |
| பொருளாளர் 077 456 8096 | தலைவர் 021 222 8174 | செயலாளர் 024 222 2289 |

சிறுதானிய பயிர் உற்பத்தியாளர் சங்கம்